எழுதுவதற்கும், மின்சார மோட்டாரை செப்பனிடவும், ரூ 467ம் 1980–81 ஆம் ஆண்டு செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும், வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையில் ஏற்கெனவே உள்ள கிணறை ஆழப்படுத்துவதற்கு ரூ. 2,500 அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

கீரிப்பாறை அரசு இரப்பர் தோட்டத்திலுள்ள தொழிலாளர் இல்லங்கள்

289—(*வினா எண் 18276)—திரு. டி. மணி ; மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ரப்பர் தோட்டத்தின் கீரிப்பாறை தோட்டத்தில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள தொழிலாளர் இல்லங்களுக்கு மின விளக்கு வசதி, குடிநீர்வசதி செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) இல்லையெனில், எப்போது இவ்வசதிகள் செய்துதரப் படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, கீரிப்பாறை மற்றும் பல்வேறு தொழிலாளர்கள் தங்குகின்ற விடுதிகளில்—ஏற்கெனவே கடந்த வருடம் ஆரம்பத்திலே அந்த விடுதிகள் கட்டப்பட்டன—நான் சென்று பார்த்தபோது பல மாதங்களாக அவர்களுக்கு மின்சார இணைப்பும், தண்ணீர் இணைப்பும் கொடுக்கப்படாமல் இருந்தது. ஆகவேதான், நான் இந்தக் கேள்வியைப் போட்டிருந்தேன். அது இப்போது வழங்கப்பட்டு வருகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே 154 வீடுகள் அடங்கிய 22 வரிசைகள கொண்ட தொழிலாளர்கள் குடியிருப்புகள கட்டி முடிக்கப்பட்டு விட்டன. அவற்றுக்கு மின வசதியும், குடிநீர் வசதியும் கொடுக்கப்பட்டு விட்டன. தற்சமயம் 105 வீடுகள் அடங்கிய 15 வரிசை கொண்ட தொழிலாளர் குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளன.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்ட பல்வேறு விடுதிகளில் இம்மாதிரி மின்சார இணைப்பும், பாதுகாக்கப்பட்ட குடிநீரும் கொடுக்காத நிலைமை இருக்கின்றது. இந்நிலை கீரிப்பாறையில் மட்டுமல்ல. அரசின் பல்

வேறு டிவிஷன்களில் அதாவது குறிப்பாக பரலியாறு டிவிஷனில் நீர்த்தேக்கத்தின் அருகாமையில், மலைப்பாங்கான பகுதியில் இம் மாதிரி பல மாதங்கள் ஆகியும் இன்னும் மின்சார இணைப்பு கொடுக்கப்படவில்லை. ஆகவே, தொழிலாளர்கள் தங்குவதற்கு லாயக்கான வீடுகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் அவசரமாக மின் இணைப்பும், பாதுகாக்கப்பட்ட குடிநீரும் கொடுக்க அரசு துரித மான நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, என்னிடத்திலே இருக்கின்ற குறிப்பு கீரிப்பாறை தோட்டத்திலுள்ள கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புக்கள் பற்றித்தான். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரப்பர் தோட்டத்திலே கட்டி முடிக்கப்பெற்றிருக்கின்ற வீடுகள் அனைத்தையும் பற்றிக் கேட்கிறார்கள். அந்த வீடுகள் அனைத்திற்கும் உடனடியாக வேண்டிய மின் வசதியும், தண்ணீர் வசதியும் செய்யப்பட்டு சப்ளையும் வந்திருக்கும் அல்லது வந்துகொண்டிருக்கும் என்று நான் நம்புகிறேன். ஆனால் குறை இருக்குமானால் உடனடியாக அத்தகைய இணைப்பு வசதிகளைச் செய்து தருவதற்கு அரசு ஏற்பாடுகள் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாத்தனூர் அணையிலுள்ள விடுதிகளை விரிவுபடுத்தும் திட்டம்

290—(*வினா எண். 21771)—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டுத் தொகுதியில் உள்ள சாத்தனூர் அணையில் உள்ள விடுதிகளைத் தமிழ்நாடு சுற்றுலா வாரியம் எடுத்து விரிவுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இல்லை.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னார்கள். சாத்தனூர் அணையில் ஏ. பி, சி. டி. என்று 3, 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அங்கே பகுதி, பகுதியாக, கிட்டத்தட்ட 50, 60 விடுதிகள் கட்டப்பட்டு உள்ளன. அங்கு பயணிகள் தங்குவதற்கேற்ற வசதிகள் இல்லாத நிலையில் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. இந்த நிலையில், சுற்றுலாப் பகுதியாக அது உள்ளதால், சுற்றுலா வாரியம் அந்த விடுதிகளை எடுத்து நிர்வகிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.